# பஞ்சாங்கங்களை எண்ணிமப்படுத்தல்

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | பஞ்சாங்கங்களை எண்ணிமப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2024/0005 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | ஜனவரி 2024 - ஜனவரி 2025 |
| அறிக்கையிடல் காலம் | ஜனவரி 2024 - ஜனவரி 2025 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | கனக துர்க்கை அம்மன் ஆலயம் |
| முக்கிய பங்குதாரர்கள் | நூலகங்கள்,பஞ்சாங்கம் எழுதும் நபர்கள் |
| பாதீடு **(Budget)** | LKR 622, 666 |

செயற்றிட்ட அறிமுகம்

பஞ்சாங்கம் (Panchangam) அல்லது ஐந்திறம் என்பது இந்துக் காலக் கணிப்பு முறையின்படி, கணிக்கப்படுகின்ற கால அட்டவணை எனலாம். பஞ்சாங்கம் என்ற வடமொழிச்சொல், (பஞ்ச + அங்கம் = பஞ்சாங்கம் ) ஐந்து உறுப்புகள் எனப் பொருள்படும். இக் காலத்தில் பஞ்சாங்கம் சமய சம்பந்தமான விடயங்களுக்கும், ஜோதிடக்கணிப்புகளுக்குமே பெரிதும் பயன்படுகின்றது.

பஞ்சாங்கம் என்பது கிரக சுழற்சிகளைப் பற்றிய வானியலைக் காட்டும் குறிப்புகள் அடங்கிய புத்தகம் என்றும் வானியல் நூல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. பஞ்சாங்கங்கள் இந்து முறையான வாழ்வியல் விடயங்களுக்கு மட்டும் உதவுபவை அல்ல. வான சாஸ்திரம், கணிதவியல் மற்றும் கிரகநிலை போன்ற விஞ்ஞானத்தன்மை சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியவையாக காணப்படுகின்றன. அவற்றை அடிப்படையாக கொன்டு பஞ்சாங்கங்கள் இலங்கைத் தமிழர் பண்பாட்டு, தமிழர் வாழ்வியல் மற்றும் சமூக விடயங்களில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை இச்செயற்றிட்டம் மூலம் பஞ்சாங்களை ஆவணப்படுத்துவதால் அறிந்துகொள்ள முடியும்.

பஞ்சாக்கத்தின் இரு வகைகளாக காணப்படும் வாக்கிய பஞ்சாங்கம் , திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டு பஞ்சாங்கங்களும் வெவ்வேறு மரபுகளை கொண்டமைந்தவை.இவை வாழ்வியலோடும், அவற்றை எவ்வாறான முறைகள் மற்றும் நம்பிக்கை ரீதியில் பின்பற்றி வந்தோம் எனும் தமிழர் மரபு மற்றும் நம்பிக்கையினை ஒன்றிணைத்து வழங்கக்கூடியவையாக காணப்படுகின்றன.

இலக்குகள்

இலங்கையில் 1869 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த 155 வாக்கிய பஞ்சாங்கங்கள் , 1887 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த 137 திருக்கணித பஞ்சாங்கங்களையும் அவற்றோடு தொடர்பான ஏனைய ஆவணங்களையும் கண்டறிந்து எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தலூடாக இத்துறையினது புராதன வரலாற்றினை அடையாளப்படுத்தலும் மற்றும் ஆய்வுக்கானதும் கற்றலுக்குமான ஒரு தளமாக உருவாக்கல். .

## செயற்றிட்ட அடைவுகள்

- இச்செயற்றிட்டத்தின் கீழ் ஜனவரி மாதம் வரையில் எண்ணிமப்படுத்தப்பட்டு , சரிபார்க்கப்பட்டு, மீதரவு இணைக்கப்பட்டு மேலும் List, Article, Cover Image, Optimize ஆகிய செயன்முறைகளும் பூரணப்படுத்தப்பட்டு 214 ஆவணங்களும் 22,660 பக்கங்களும் வலைத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- 1974 ஆம் ஆண்டிலிருந்து வெளீவந்த 71 திருக்கணித பஞ்சாங்கங்கள் அடையாளப்படுத்தப்பட்டு செயற்றிட்ட முகப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.
  திருக்கணித பஞ்சாங்கங்கள்
- 1869 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த 145 வாக்கிய பஞ்சாங்கள் தேடிப்பெறப்பட்டதுடன் அவை பஞ்சாங்கங்களை எண்ணிமப்படுத்தல் செயற்றிட்ட முகப்பின் கீழ் இலவச அணுகத்திற்காக இணைக்கப்பட்டுள்ளன.
  வாக்கிய பஞ்சாங்கங்கள்
- திருக்கணித பஞ்சாங்கதின் ஆசிரியரான சிதம்பரநாதக்குருக்கள் ஜெகதீஸ்வரசர்மா ஐயரிடம் வாய்மொழி வரலாறு பெறப்பட்டதுடன் செயற்றிட்ட முகப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது.

சவால்கள்

- பஞ்சாங்க சேகரிப்பாளர்களின் எண்ணிக்கை ஏனைய ஆவண சேகரிப்பாளர்களை விட குறைவானதாகும். அவர்களை அடையாளங்கண்டு ஆவணங்களை சேகரித்தல் சவாலாகும்.
- செயற்றிட்த்திற்கான தொடர்சியான நிதியினை பெற்றுக்கொள்வதில் உள்ள சவால்கள்

செயற்றிட்டம் தொடர்பானவை

- நூலக நிறுவனத்தால் பஞ்சாங்களை ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் “சமஸ்கிருத முதுதத்துவமானி’ பட்டத்தையும் ‘சமஸ்கிருத வித்ய விபூஷணம்’ மற்றும் ‘செந்தமிழ் ஆய்வுச் சிகரம்’ ஆகிய விருதுகளையும் பெற்ற திரு . சர்வேஸ்வர ஐயர் பத்மநாபன் அவர்களால் நிகழ்த்தப்பட உரையின் இணைப்பு கீழே இணைக்கப்பட்டுள்ளது .
  https://www.instagram.com/p/CUcbXh9PTLG/
  https://www.youtube.com/watch?v=IooRzF0QsKY&list=UULFCJVgY2UiRfYdXR5mVF5hqw&index=58

## செயற்றிட்டப்பாதீட்டு அறிக்கை

Financial report